මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව. | செயலகம், கொழும்பு 01. இலங்கை | The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office (94)-11-2484500 (94)-11-2484600 (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No. BD/CBP/4/1/2/2017
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2016.08.02

**தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல. 02/2016**

தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களம்
பொதுத் திறைசேரி
கொழும்பு – 01

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

**வரவு செலவுத்திட்ட அழைப்பு – 2017**

**2017 வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள் மற்றும் பணிப்புரைகள்**

**01. அறிமுகம்**

2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவு செலவுத்திட்டத்தினைத் தயாரிப்பதற்கான வேலைச் சட்டகம் 2016.07.20 ஆம் திகதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக, 2017 வரவு செலவுத்திட்டமானது அரசாங்கத்தின் ஒரு மில்லியன் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், வருமான மட்டத்தினை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளை அதிகரித்தல், கிராமிய பொருளாதாரங்களை அபிவிருத்தி செய்தல், காணி உரித்தினை உறுதிப்படுத்துவதுடன் நாட்டில் ஸ்திரமான நடுத்தர வகுப்பொன்றினை உருவாக்குதல் போன்ற அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை வேலைச்சட்டகத்திற்கமைவாக தயாரிக்கப்படவுள்ளது. இந்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக பொருளாதாரமானது அதிக வசதிகளைக் கொண்ட பெறுமதி சேர்ப்பினை மேம்படுத்தும் வகையில் மீள கட்டமைக்கப்படுதல் வேண்டும்.

எனவே, அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை வேலைச் சட்டகத்திற்குள், கிராமிய மட்டத்தில் தொழில் வாய்ப்புகளை உருவாக்குதல், ஏற்றுமதி வருமானங்களை அதிகரித்தல், திறன் மிக்க ஊழியர்களின் ஆற்றல்களை மேம்படுத்தல், அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காக தனியார்துறை பங்களிப்பினை அதிகரித்தல் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை துரிதப்படுத்தல் உள்ளடங்களாக 2017 வரவு செலவுத்திட்டத்தின் பிரதான கரிசனை காணப்படுகின்றது. மேலும், இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய முக்கிய துறைகளின் விபரம் பின்வருமாறு;

(i) **கிராமிய பிரதேசங்களில் தொழில் வாய்ப்புகள் உருவாக்கல்:** அபிவிருத்தியில் கிராமிய மற்றும் நகர முரண்பாடுகளைத் தீர்ப்பதற்காக அரசாங்கத்தினால் ஏற்கனவே செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும். (உதாரணமாக: கொத்தணி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக செயற்படுத்தப்பட்ட திட்டங்கள்) இளைஞர் செயற்பாடுகளை ஊக்குவித்தல், வருமான உருவாக்கலுக்கான புதிய செயற்பாடுகளை செயற்படுத்தல், குறைவாகப் பயன்படுத்தப்பட்ட / பயன்படுத்தப்படாத கிராமிய காணிகளின் பயன்பாட்டினை அதிகரித்தல், கிராமங்களிலிருந்து நகரப் பிரதேசங்களுக்கு இடம்பெயர்வினைக் குறைத்தல் என்பவற்றுக்கு இந் நிகழ்ச்சித்திட்டங்கள் உதவியாக இருக்கும். தொழில் உருவாக்கல் மற்றும் கிராமிய / பிராந்திய அபிவிருத்தி என்பன முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவையாகும்.

(ii) **ஏற்றுமதி அபிவிருத்தி:** உற்பத்தி பல்வகைப்படுத்தல் மற்றும் ஏற்றுமதி உற்பத்திகள் மற்றும் சேவைகளின் பெறுமதி சேர்ப்பின் பங்கு அதிகரிப்பு என்பவற்றின் ஊடாக இது அடையப்படும். இதற்கு மேலதிகமாக, ஏற்றுமதி சந்தைகளுடன் நேரடியான தொடர்புடைய சேவைப் பிரதேசங்கள் அல்லது விசேட உற்பத்தி வலயங்களை தாபிப்பதற்கு ஊக்குவிக்கப்படுகின்றது.

(iii) **திறன் அபிவிருத்தி:** அரசாங்கத்தினால் எதிர்பார்க்கப்படும் பொருளாதார மாற்றத்திற்கு வசதியளிப்பதற்கு திறமையான ஊழியர்களின் கிடைப்பனவு மிகவும் சிக்கலாக அமைந்துள்ளது. இப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு எவ்வித தாமதமுமின்றி விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வடிவமைத்து செயற்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். அத்தகைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்து செயற்படுத்துவதற்கு தனியார் துறையில் காணப்படும் வசதிகளும் பயன்படுத்தப்படும்.

(iv) **தனியார் துறை முதலீடு:** புதிய முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களில் தனியார் துறையின் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்வதற்கான சாதகமான சூழ்நிலையொன்றினை உருவாக்குவதற்கான தேவை காணப்படுகின்றது. இந்த வகையில், தொழில் முயற்சியாண்மையினை மேம்படுத்தும் நோக்கத்துடன் தனியார் துறையின் பயன்படுத்தப்படாத ஆற்றல்களை பயன்படுத்துவதற்கு நிறுவன வேலைச் சட்டகம் கட்டியெழுப்பப்படுதல் வேண்டும்.

(v) **உற்பத்தி மற்றும் கேள்வி என்பவற்றுக்கிடையிலான தொடர்பு:** இது தொடர்பாக, வழங்கற் சங்கிலி மற்றும் அது தொடர்பான நிறுவனங்கள், உற்பத்திச் செயற்பாடுகள் தொடர்பான உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை இனம் காணல் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய தேவைப்பாடுகளாகும்.

(vi) **உட்கட்டமைப்பு அபிவிருத்தி:** திட்டமிடப்பட்டவாறு உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் துரிதப்படுத்தப்பட வேண்டியுள்ளதுடன் புதிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னுரிமையினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

**02. பேரண்டப் பொருளாதார வேலைத்திட்டம்**

2017 இல், அரசாங்கம் பொருளாதார வளர்ச்சியில் 6 சதவீதத்தினை அடைந்து கொள்வதற்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறக்குறைய 30 சதவீதத்தினை முதலீடு செய்வதற்கும் அதில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசாங்க முதலீடு 5 சதவீதமாக இருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எதிர்பார்க்கப்படும் வருமான வளர்ச்சி மற்றும் நியாயமான செலவினம் என்பவற்றின் ஒத்துழைப்புடன் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது 4.7 சதவீதமாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. ஏனைய பேரண்டப்பொருளாதார சுட்டிகளின் அடிப்படையில் 2017 இல் பண வீக்கத்தினை 4 சதவீதமாகவும் வேலையின்மை விகிதத்தினை 4.5 சதவீதமாகவும் பேணுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

### 03. வரவு செலவுத்திட்ட வேலைச்சட்டகம் 2017

2016 இல், அரசாங்கம் வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான சாதனமொன்றாக பூச்சிய அடிப்படை வரவுசெலவுத்திட்ட தயாரிப்பு முறைமையினை (Zero Based Budgeting) அறிமுகப்படுத்தியது. பூச்சிய அடிப்படை வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு நடைமுறையின் அடிப்படை நியாயமானது ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டம் அல்லது கருத்திட்டமும் நிதி அளிப்புக்கான அவற்றினது சொந்த இருப்பினை நியாயப்படுத்துதல் வேண்டும். இப் பின்னணியில், அமைச்சு/ நிறுவனம் மற்றும் அவற்றின் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் ஒவ்வொன்றும் அவற்றினது தேவைக்கேற்ப நிதியளிப்புக்கான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கும் இரட்டைப் பணிகள் மற்றும் ஒன்றன் மேல் ஒன்றான பணிகளைத் தவிர்ப்பதற்கும் அவற்றுக்காக ஒப்படைக்கப்பட்ட பிரதான பணிகளையும் செயற்பாடுகளையும் மீளாய்வு செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. தொடர்புடைய தேவையான வழிகாட்டல்கள் தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை இல: 3/2015 இல் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இப்பின்னணியில், 2017 வரவு செலவுத்திட்டத் தயாரிப்பானது பூச்சிய அடிப்படை வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு நடைமுறையினை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்து மேற்கொள்ளப்படும் அதேவேளை, 2020 ஆம் ஆண்டளவில் நாட்டின் வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு முறைமையினை மாற்றியமைக்கும் நோக்கத்துடன் செயலாற்றுகை அடிப்படை வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு முறைமையினை நோக்கி நகருவதாக அமையும்.

அரசாங்கத்தினால் எதிர்நோக்கப்படும் தற்போதைய சவால்களைக் கவனத்திற் கொண்டு, செலவிடப்படும் பணத்திற்கான பெறுமதியினைப் பெற்றுக் கொள்கின்ற வகையில் அரசாங்கத்தின் செலவினத்தினை வினைத்திறன் மிக்கதாக முகாமை செய்வதற்கு இது அவசியமானதாகும். எனவே, 2017 ஆம் ஆண்டிற்கான செலவின மதிப்பீடுகளுடன் நிரல் அமைச்சுக்களின் செயலாளர்கள் அனைவரும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கும் இரட்டிப்பாக்குதல், ஒன்றன் மேல் ஒன்றான செயற்பாடுகளினை குறைத்தல் மற்றும் அரசாங்கத்தின் செலவினத்தினை சிக்கனமாக மேற்கொள்ளல் போன்ற மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் விபரங்களை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2017 இற்கான அமைச்சின் செலவினங்களை வடிவமைப்பதில் பின்வரும் துறைகளுக்கு விசேட முன்னுரிமைக் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

அ. தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 3/2015 இன் **பின்னிணைப்பு I** மற்றும் 4 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப நிறுவன மறுசீரமைப்புகளை அறிமுகம் செய்தல்.

ஆ. அனைத்து பதவியனரையும் உள்ளடக்கும் வகையில் வேலை மதிப்பீடுகளை நடாத்துதல் மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காக அவர்களது வேலைச் சுமையினை இனம் காணுதல்.

இ. இலக்கிடப்பட்ட குழுக்களுக்கு உதவித் தொகை மற்றும் மாற்றல்கள் வழங்கப்படுவதனை உறுதிப்படுத்தல்.

### 04. மதிப்பீடுகளைத் தயாரித்தல்

#### 4.1 பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள்

செலவின மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு முன்னர் பின்வரும் மதிப்பீட்டு நடைமுறைகளை பின்பற்றுமாறு அனைத்து செலவின முகவர் நிறுவனங்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

i. செலவுகளை மேற்கொள்ளும் நிலையங்களாக கருத்திட்டங்கள் / உப கருத்திட்டங்களை இனங்காணல் மற்றும் ஒவ்வொரு செலவு நிலையங்களின் கீழ் செயற்பாடுகளை தெளிவாக புரிந்து கொள்ளல்.

ii. ஒவ்வொரு செயற்பாட்டினதும் வள தேவைப்பாடுகளை (உள்ளீடுகள்) அல்லது குழுச் செயற்பாடுகள் மற்றும் செலவு நிலையங்களுக்கிடையில் வெளியீடு என்பவற்றினை இனங்காணல்.

iii. குறித்த செலவு நிலையமொன்றின் தேவையான வளங்களின் செலவுகளை பகுப்பாய்வு செய்தல்.

iv. ஒவ்வொரு செலவு நிலையத்தினதும் வெளியீட்டினை அளவிடுவதற்கான பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகளை இனங்காணல், பொருளாதார மற்றும் வினைத்திறனை பிரதிபளித்தல்.

v. ஒவ்வொரு செலவு நிலையத்தின் கீழும் வெளியீடு அல்லது விளைவினை உறுதிப்படுத்தல்.

vi. ஒவ்வொரு கருத்திட்டம் / உப கருத்திட்டத்தின் பணத்திற்கான பெறுமதி, செலவு தாக்கம், செலவுப் பயன் என்பவற்றினை பரிசோதனை செய்தல்.

vii. மதிப்பிடப்பட்ட செலவினத்தின் ஆகக் கூடிய தேவைப்பாட்டினை நியாயப்படுத்தல் மற்றும் உறுதிப்படுத்தல்.

viii. அடுத்த 3 வருடங்களுக்கான – 2017 - 2019 செயலாற்றுகை இலக்குகளை உருவாக்குதல்.

**4.2 செலவின எதிர்வுகூறல்**

2017 ஆம் ஆண்டுக்கான வரைவு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் இச் சுற்றுநிருபத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட வழிகாட்டல்களின் கீழ் தயாரிக்கப்பட்டு தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு வழங்கப்படுதல் வேண்டும். செலவின எதிர்வு கூறல்களை தயாரித்தல் மற்றும் செயலாற்றுகை இலக்குகளை மதிப்பீடு செய்தல் என்பவற்றின் போது பின்வருவனவற்றை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

i. **பணவீக்கம்:** 2017 இற்கான பணவீக்க திருத்தங்களை திறைசேரி மேற்கொள்ளும் என்ற வகையில் பணவீக்கமானது நிரல் அமைச்சுக்களினால் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

ii. **கொள்வனவு திட்டங்கள்:** அனைத்து மதிப்பீடுகளும் கொள்வனவு வழிகாட்டலுக்கமைவாக வடிவமைக்கப்பட்ட கொள்வனவுத் திட்டங்களைக் கொண்டிருத்தல் வேண்டும். வரவு செலவுத்திட்டத்திற்கான செலவினத் தயாரிப்பானது, சிறந்தமுறையில் திட்டமிடப்பட்ட கொள்வனவுத் திட்டங்களை அடிப்படையாக்கொண்டிருத்தல் வேண்டும்.

iii. **பொறுப்புப் பதிவு:** ஏதேனும் செலவு அதிகரிப்பினை மிகைப்பதற்கு வருடம் முழுவதும் பொறுப்பு பதிவு ஒன்று பேணப்படுதல் வேண்டும்.

iv. **வரிகளைச் செலுத்துவதற்கான ஏற்பாடு :** வரவு செலவுத்திட்ட ஏற்பாடானது கருத்திட்டத்துடன் தொடர்பான விடயங்களுக்கு ஏற்புடையதான தீர்வைகள், வரிகள் மற்றும் கட்டணங்களை உள்ளடக்கும் வகையில் மதிப்பீடுசெய்யப்படுதல் வேண்டும். தற்காலிக அடிப்படையில் அல்லது குறைநிரப்பல் வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்யப்படமாட்டாது.

4.2.1 **மீண்டெழும் செலவினம்**

(அ) **ஆள்சார் வேதனாதிகள்:** செலவின நிறுவனங்கள் 2016 ஜுன் 30 ஆந் திகதி அன்றுள்ளவாறான உண்மையான பதவியணியினை அடிப்படையாகக் கொண்டு சம்பளங்கள் மற்றும் கூலிகளை கணிப்பீடுசெய்தல் வேண்டும்.

(ஆ) **பயனாளிகளின் எண்ணிக்கை வேறுபாடு**: செலவின நிறுவனங்கள் உரித்து நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினங்களை திருத்துதல் வேண்டும். (ஓய்வூதியங்கள், சமூகப்பாதுகாப்புத் திட்டங்கள் மற்றம் பாடசாலை சீருடைகள் போன்றன) பயன் பெறுவதற்கு தகைமையுடைய தனிப்பட்டவர்களின் எண்ணிக்கையில் மதிப்பிடப்பட்ட தொகை அதிகரிக்கப்பட்டு அல்லது குறைவடைந்துள்ளது. அத்தகைய ஒவ்வொரு அபிவிருத்தியும் வரவு செலவுத்திட்டத் தேவைப்பாடுகளை நியாயப்படுத்துவதற்கு உண்மையான பயனாளிகளின் எண்ணிக்கையினை பிரதிபளித்தல் வேண்டும்.

(இ) **எரிபொருள் செலவினம்**: எரிபொருள் செலவினமானது தொடர்புடைய சுற்றுநிருபங்களின் அடிப்படையில் (2015.02.11 ஆந் திகதிய சனாதிபதி செயலக சுற்றுநிருப இல சிஎஸ்ஏ/1/17/1/1 மற்றும் 2016.10.23 ஆந் திகதிய சிஎஸ்ஏ/பீ/40 ஆம் இலக்க சுற்றுநிருபம் மற்றும் இவ்விடயம் தொடர்பான பொது நிர்வாக சுற்றுநிருபம்) மேற்கொள்ளப்படுதல் வேண்டும். வாகனங்களின் எண்ணிக்கை, ஓட்ட மணித்தியாலம் என்பன எரிபொருள் நுகர்வுக்கு ஏற்ற வகையில் வழங்கப்படுதல் வேண்டும். மதிப்பீடுகளுடன் விபரமான மதிப்பீடு/கணிப்பீடு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(ஈ) **வாடகை மற்றும் உள்நாட்டு வரிகள்**: வாடகை மற்றும் உள்நாட்டு வரிகளுக்கான விபரமான செலவு மதிப்பீட்டு தேவையினை அவசியமான நியாயப்படுத்தலுடன் சமர்ப்பித்தல் வேண்டும். ஏனெனில் பெரும்பாலான நிறுவனங்கள் “செலவினக் குறியீடு 1404 – வாடகைகள் மற்றும் உள்நாட்டு வரிகள்” என்ற செலவினத் தலைப்பிலிருந்து மற்றுமொரு செலவின குறியீட்டுக்கு அடிக்கடி மாற்றுகின்றன.

(உ) **அங்கீகாரமற்ற முதலீடுகள்**: நிரல் அமைச்சொன்றின் நோக்கெல்லையின் கீழ் வரும் அனைத்து நியதிச்சட்ட நிறுவனங்களினதும் ஐந்தொகைகள், விசேடமாக திரட்டு நிதியினூடாக நிதியளிக்கப்பட்டவை நிலையான வைப்புகளில், திறைசேரி உண்டியல்களில் அங்கீகாரமற்ற முதலீடுகள் இடம்பெற்றுள்ளனவா என்பதனை பரிசீலனை செய்தல் வேண்டும். அவ்வாறு காணப்படுமாயின் அத்தகைய தொகை 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட தயாரிப்பு தேவைப்பாட்டுக்கான கணக்கில் எடுக்கப்படுதல் வேண்டும்.

4.2.2 **மூலதனச் செலவினம்**

(அ) மூலதனச் செலவினமானது கீழ் வருமாறு தனியாகக் குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(i) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் அதனோடு தொடர்புடைய உள்நாட்டு நிதித் தேவைப்பாடுகள்.
(ii) உள்நாட்டு மூலங்களிலிருந்து மேற்கொள்ளப்படக்கூடிய ஏனைய மூலதனச் செலவினம்.

(ஆ) ஏனைய மூலதனச் செலவினங்களுக்கான வளங்களை ஒதுக்கீடு செய்வதில் பின்வருமாறு முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

(i) தொடரான பணிகளை நிறைவு செய்தல்.
(ii) மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு.
(iii) வரையறைகளுக்குள்ளான புதிய கருத்திட்டங்கள்.

(இ) அரசாங்கத்தின் முன்னுரிமைகளின் அடிப்படையில் 4.2.2. (ஆ) (i) மற்றும் (ii) விடயத்தின் கீழ் தேவையான நிதியினை ஒழுங்கு செய்ததன் பின்னர் செலவின வரையறைக்குள் வளங்களை ஒதுக்கீடு செய்வதற்கான சுதந்திரத்தினை செலவின அலகுகள் கொண்டுள்ளன. எவ்வாறாயினும், மிகக் கூடிய முன்னுரிமை செயற்பாடு ஒன்றுக்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்படவில்லையென திறைசேரி அவதானிக்கும் பட்சத்தில், தொடர்புடைய நிரல் அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாடுவதன் பேரில் திறைசேரி குறித்த வரையறைக்குள் நிதி ஏற்பாடுகளை மீள் ஒழுங்கு செய்யும். மூலதனச் செலவினமானது பின்வருவனவற்றுக்கு உரிய கவனம் செலுத்துவதன் மூலம் மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும்.

(i) 2016 நிதியாண்டின் போது மூலதனச் செலவினமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட பெரும்பாலான நிதி ஏற்பாடுகள் முறையாகப் பயன்படுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்பொழுது காணப்படும் ஆற்றலினைக் கவனத்திற் கொண்டு, கருத்திட்டத்தின் நோக்கெல்லை மற்றும் மொத்த செலவு மதிப்பீடு, குறித்த நிதி வருடத்திற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் என்பன நடுத்தரகால வரவு செலவுத்திட்ட வேலைச் சட்டகத்திற்குள் தெளிவாக இனங்காணப்படுதல் வேண்டும்.

(ii) வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதனை கவனத்திற் கொள்வதற்காக தொடர்புடைய அதிகாரிகளிடமிருந்து புதிய கருத்திட்டங்களுக்கு தேவையான அங்கீகாரம் பெறப்படுதல் வேண்டும்.

(iii) பெண்கள் பயனடைவதனை உறுதிப்படுத்தும் வகையில் புதிய அபிவிருத்திக் கருத்திட்டங்களின் பயனாளிகள் வேறாக இனம் காணப்படுதல் வேண்டும்.

## 05. புதிய செலவின முன்மொழிவுகள்

2017 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்காக கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய புதிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களின் பட்டியல்களை ("Wish List") மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் சுருக்கமான விபரத்துடன் சமர்ப்பிப்பதற்கு நிரல் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## 06. கருத்திட்ட செயலாற்றுகை சுட்டிகள்

கருத்திட்டங்கள்/உபகருத்திட்டங்களின் கீழ் குழுமப் படுத்தப்பட்ட பிரதான பணிகள் மற்றும் அவற்றின் செயற்பாடுகள் தொடர்பாக செலவின நிறுவனங்கள் செயலாற்றுகை சுட்டிகளை குறிப்பீடு செய்வதற்கு வேண்டப்படுவர். இந்த சுட்டிகள் அளவீடு செய்யப்பட முடியுமாக இருத்தல் வேண்டும். கட்டு நிதி விடுவிப்பு கிரயத்திற்காக குறித்த நிதியாண்டின் போது இவை கண்காணிப்பு செய்யப்படும்.

## 07. மதிப்பீடுகளை சமர்ப்பித்தல்

உண்மையான அடிப்படை கணக்கீட்டு வழிமுறையின் தேவைக்கேற்ப, விசேடமாக ஒருங்கிணைந்த திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமையினால் (ITMIS) மேற்கொள்ளப்படும் ஆதன தரவு தளமொன்றினை உருவாக்குவதற்கு நிலையான செலவினக் குறியீடுகள் செலுத்தப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட செலவினக் குறியீடுகள் **பின்னிணைப்பு** I இல் தரப்பட்டுள்ளது. திறைசேரி முகாமைத்துவ தகவல் முறைமை செலவின வகுப்பாக்கத்தின் விபரமான மட்டங்களை உள்ளடக்கியுள்ளது என்ற வகையில் சரியான செலவின குறியீட்டினை தெரிவு செய்ய வேண்டியுள்ளது.

08. செலவின மதிப்பீடுகளை சமர்ப்பித்தல்

புதிய கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்களாக (அதாவது "Wish List") அனைத்து பின்னிணைப்புகளுடன் முறையாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளின் பிரதிகள் **2016 ஆகஸ்ட் 19 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர்** தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். இதற்கு மேலதிகமாக இவ்வாவணத்தின் மென் பிரதி தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் தொடர்புடைய பதவி நிலை அலுவலருக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். செலவின நிறுவனங்களுடன் மதியுரைச் செயன்முறைகள் **2016 ஆகஸ்ட் 10** ஆம் திகதிக்குப் பின்னர் ஆரம்பமாகும்.

09. அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்குகள்

**பின்னிணைப்பு II** இல் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைவாக அரசாங்க அலுவலர் முற்பணக் கணக்குகளின் மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

10. தெளிவுபடுத்தல்கள்

இது தொடர்பான மேலதிக தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமாயின் உங்களது அமைச்சு/திணைக்களம் நிறுவனம் தொடர்பான பணிகளைக் கையாள்கின்ற தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் அலுவலரை தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம் / ஆர்.எச்.எஸ்.சமரதுங்க**
**திறைசேரி செயலாளர்**

பிரதிகள் :

i. சனாதிபதியின் செயலாளர்
ii. பிரதமரின் செயலாளர்
iii. அமைச்சரவையின் செயலாளர்
iv. கணக்காய்வாளர் நாயகம்

பின்னிணைப்பு - I

**நிலையான செலவினக் குறியீடுகள், வகுதிகள் மற்றும் செலவினத் தலைப்புகள் - வரவு செலவுத்திட்டம் 2017**

| செலவினக் குறியீடு | நோக்க வகுதி / தலைப்பு குறியீடு |
|---|---|
| | **மீண்டெழும் செலவினம்** |
| | **ஆள்சார் வேதனாதிகள்** |
| 1001 | சம்பளங்கள் மற்றும் கூலிகள் |
| 1002 | மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள் |
| 1003 | ஏனைய கொடுப்பனவுகள் |
| | **பிரயாணச் செலவினங்கள்** |
| 1101 | உள்நாட்டு |
| 1102 | வெளிநாட்டு |
| | **வழங்கல்கள்** |
| 1201 | காகிதாதிகள் மற்றும் அலுவலக பொருட்கள் |
| 1202 | எரிபொருள் |
| 1203 | உணவு மற்றும் சீருடைகள் |
| 1204 | மருத்துவ வழங்கல்கள் |
| 1205 | ஏனைய |
| | **பராமரிப்புச் செலவினம்** |
| 1301 | வாகனங்கள் |
| 1302 | பொறித்தொகுதி மற்றும் உபகரணம் |
| 1303 | கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் |
| | **சேவைகள்** |
| 1401 | போக்குவரத்து |
| 1402 | தபால் மற்றும் தொடர்பாடல் |
| 1403 | மின்சாரம் மற்றும நீர் |
| 1404 | வாடகை மற்றும் உள்ளுர் வரிகள் |
| 1406 | குத்தகை வாகனங்களுக்கான வட்டிக் கொடுப்பனவு |
| 1408 | தொழிற்பாட்டு குத்தகையின் கீழ் வாகனக் கொள்வனவுக்காக வாடகை |
| 1409 | ஏனைய |
| | **மாற்றல்கள்** |
| 1501 | நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்கள் |
| 1502 | இளைப்பாறல் நன்மைகள் |
| 1503 | அரசாங்க நிறுவனங்கள் |
| 1504 | அபிவிருத்தி உதவு தொகைகள் |
| 1505 | சந்தாக்கள் மற்றும் பங்களிப்புக் கட்டணங்கள் |
| 1506 | அரசாங்க ஊழியர்களுக்கான ஆதனக் கடன் வட்டி |
| 1507 | மாகாண சபைகளுக்கான பங்களிப்பு |
| 1508 | ஏனைய |
| | **வட்டிக் கொடுப்பனவுகள்** |
| 1601 | உள்நாட்டு |
| 1602 | வெளிநாட்டு |

## ஏனைய மீண்டெழும் செலவினம்

1701 நட்டங்கள் மற்றும் பதிவழிப்புகள்
1702 நானாவிதச் சேவைகள்
1703 அரச கரும மொழிகள் கொள்கையினை செயற்படுத்தல்

## மூலதனச் செலவினம்

### மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு

2001 கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்
2002 பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணம்
2003 வாகனங்கள்
2004 உட்கட்டமைப்பு

### மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு

2101 வாகனங்கள்
2102 தளபாடம் மற்றும் அலுவலக உபகரணம்
2103 பொறித்தொகுதி, இயந்திரம் மற்றும் உபகரணம்
2104 கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்பு
2105 காணி மற்றும் காணி மேம்பாடுகள்
2106 மென்பொருள் அபிவிருத்தி
2108 நிதிக் குத்தகையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களுக்கான மூலதனக் கொடுப்பனவுகள்
2109 உட்கட்டமைப்பு

### மூலதன மாற்றல்கள்

2201 அரசாங்க நிறுவனங்கள்
2202 அபிவிருத்தி உதவி
2203 மாகாண சபைகளுக்கான பங்களிப்பு
2204 வெளிநாட்டு மாற்றல்கள்
2205 அரசாங்கமல்லாத நிறுவனங்களுக்கான மூலதன மானியம்

### நிதிச் சொத்துக்களின் கொள்வனவு

2301 பங்குப் பங்களிப்பு
2302 வாடகை

### திறன் விருத்தி

2401 பதவியணிப் பயிற்சி

### ஏனைய மூலதனச் செலவினம்

2501 மீள் கட்டமைப்பு
2503 நானாவிதச் சேவைகள்
2505 கொள்வனவு தயார் நிலை
2507 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

## அரசாங்கப் படுகடன் வளர்ச்சி

### அரச படுகடன் கொடுப்பனவுகள்

3001 உள்நாட்டு
3002 வெளிநாட்டு

பின்னிணைப்பு - II

## அரசாங்க அலுவலர் முற்பனக் கணக்கிற்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு - 2017

1. அமைச்சு / திணைக்களத்தின் பெயர் :- ...........................................................

2. தலைப்பு இல. :- ..........................................................................................

3. 2016 யூன் சம்பள அளவுத்திட்டத்திற்கவைவாக :-

    I. பண்டிகை முற்பனத்தினைப் பெறுவதற்கு உரித்துடைய அலுவலர் எண்ணிக்கை:-..........
    II. விசேட முற்பனத்தினைப் பெறுவதற்கு உரித்துடைய அலுவலர் எண்ணிக்கை:-..............
    III. இடர் கடனைப் பெறுவதற்கு உரித்துடைய அலுவலர் எண்ணிக்கை:-..........................
    IV. 2016 யூன் சம்பளத்திலிருந்து அறவிடப்பட்ட தவணைக்கட்டனத் தொகை:-.....................
    V. 2016 யூன் சம்பளங்களுக்கான செலவினம் :- ..................................................
    (செலவின நோக்கக் குறியீட்டு தலைப்பு இல. 1001 இற்கு அமைவாக)

4. 2017 சனவரிக்கான மதிப்பிடப்பட்ட சம்பளம் - 3/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றுநிருபத்திற்கு அமைவாக (செலவின நோக்கக் குறியீட்டு தலைப்பு இல. 1001 இற்கு அமைவாக) :- ..........................................................................................

5. 2015 ஆம் ஆண்டின் அரசாங்க அலுவலர் முற்பனக் கணக்கு இணக்கக்கூற்றுகமைவாக

    I. மொத்த செலவினம் (011 இன் கீழ்) :-..................................................
    II. மொத்தப் பெறுகைகள் (011 இன் கீழ்) :-..................................................
    III. டிசம்பர் 31 அன்றுள்ளவாறு படுகடன் மீதி :-..................................................

6. 2017 வருடத்திற்காக நீங்கள் முன்மொழிந்த வரையறைகள்

    I. ஆகக்கூடிய செலவின வரையறை (011 இன் கீழ்) :-............................................
    II. ஆகக்குறைந்த பெறுகை வரையறை (011 இன் கீழ்) :-............................................
    III. ஆகக்கூடிய படுகடன் மீதி வரையறை :-............................................

திகதி ........................

.............................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்